**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர்.</u>**

OS.22/2018

நாள். 22.06.2022

பி.வா.சா.1 - தமிழரசி

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

முனியசாமி என்ற ராஜூ என்பவர் எனக்கு நல்ல பழக்கம். அடமான கடன் நான் அவரிடம் வாங்கியிருந்தேன். அடமான சொத்து எனக்கு பாத்தியப்பட்ட சொத்து. 23.03.2005 தேதியிட்ட வாசாஆ1ன் படி முனியசாமி என்ற ராஜூவிடம் ரூ.50,000/-ம் பெற்றுக்கொண்டு அதற்கு மேற்படி அடமான கடன் எழுதிக்கொடுத்தேன். நான் எவ்வாறு வட்டி செலுத்தினேன் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அடமான பத்திரத்தின் பின்பக்கம் வட்டி செலுத்தியது வரவு வைக்கப்படவில்லை. 17.01.2013ம் தேதியிட்ட அடமான பத்திரத்தில் நான் ரூ.2,00,000/-ம வாங்கிக்கொண்டு ரூ.2,50,000/-ம் எழுதிக்கொடுத்தேன் என்றால் நான் எந்த பணமும் வாங்கவில்லை. வாசாஆ2 ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணம் தான். இந்த ஆவணம் பதிவு செய்த அதிகாரியிடம் நான் அவ்வாறு பணம் எதுவும் வாங்கவில்லை என்று சொன்னேனா என்று கேட்டால் ஆவணம் தயாரித்த போது முனியசாமி என்ற ராஜூவிடம் இது குறித்து ஆட்சேபனை தெரிவித்தேன். இது சம்மந்தமாக முனியசாமி என்ற ராஜூக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. 17.01.2013 அன்று நான் முனியசாமி என்ற ராஜூவிடம் ரூ.2,50,000/- வாங்கிக்கொண்டு தற்போது வாங்கவில்லை என்று பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாசாஆ3 முனியசாமி என்ற ராஜூக்கு நான் எழுதிக்கொடுத்த மேல்அடமானம் என்றால் வட்டிக்காக அது எழுதிக்கொடுக்கப்பட்டது. அந்த ஆவணத்தில் அவ்வாறு வட்டிக்காக எழுதப்பட்டதாக குறிப்புகள் எதுவுமில்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இனங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.